

# எளிதில் பாதிப்படையக்கூடிய வயதுவந்தோர் சட்டம்

## செயல்முறைகள் – ஒரு கண்ணோ ட்டம்

எளிதில் பாதிப்படையக்கூடிய வயதுவந்தோருக்கு (விஎ) நீங் கள் எவ் வாறு உதவலாம் மற்றும் உதவுவதில் என்னெ ன்ன நடைமுறைகள் உள்ளன என் பதைப் பற்றி நன்கு புரிந்துக்கொள்ள இந்த துண்டுப் பிரசுரம் உங்களுக்கு உதவும். எளிதில் பாதிப்படையக்கூடிய வயதுவந்தோரின் குடும்ப உறுப்பினர்கள் இவர்களைத் துன்புறுத்தலிலிருந்து பாதுகாக்க வேண்டும். ஒரு வேைள, குடும்ப உறுப்பினர் அவ்வாறு செய்ய முடியாவிட்டால், அல்லது நீங்கள் ஓர் எளிதில் பாதிப்படையக்கூடிய வயதுவந்தோராக இருந்து, துன்புறுத்தலிலிருந்து உங்களைப் பாதுகாக்க முடியாவிட்டால், மேலே குறிப்பிடப்பட்ட சட்டத்தின் கீழ் இப்போது நீங்கள் உதவியையும் ஆதரவையும் பெறலாம். நீங் கள் ஒரு குடும்ப ேசைவ நிலையத்தில் (எஃப். எஸ். சி), பாதுகாப்பு நிபுணத்துவ நிலையம்(பி.எஸ் .சி) உதவி பெறலாம் அல்லது குடும்ப நீதிமன்ற ங்களில் (எஃப்ஜேசி) அமைந்துள்ள குடும்ப பாதுகாப்பு நிலையத்திற்குச் செல்லலாம்.

# எளிதில் பாதிப்படையக்கூடிய வயதுவந்தோர் சட்டம் (விஎஎ)

எளிதில் பாதிப்படையக்கூடிய வயதுவந்தோர் சட்டம் 2018
19 டிசம்பர் தேதியில் செயற்பாட்டிற்கு வந்தது.



## படி 1
## எளிதில் பாதிப்படையக்கூடிய வயதுவந்தோர் என்பவர் யார்?

பின்வருவனவற்றை உடையவர்:

- 18 வயது அல்லது அதற்கு மேற்பட்டவர்
- மன அல்லது உடல் ரீதியான குறைபாடு உடையவர், ஊனம் அல்லது திறன் குறைபாடு ஆகியவற்றைக் கொண்டவர், அதன் காரணமாக,
- துன்புறுத்தல், புறக்கணிப்பு அல்லது சுயப்புறக்கணிப்பிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள இயலாதவர்.



## படி 2
## துன்புறுத்தல், புறக்கணிப்பு அல்லது சுயப்புறக்கணிப்பு என்றால் என்ன?

| | |
|---|---|
| **துன்புறுத்தல்** | உடல் ரீதியான துன்புறுத்தல் |
| | உணர்வுபூர்வ அல்லது உளவியல் துன்புறுத்தல் |
| | எளிதில் பாதிப்படையக்கூடிய வயதுவந்தோரைக் கட்டுப்படுத்தும் அல்லது ஆதிக்கம் செலுத்தும் நடத்தை, எளிதில் பாதிப்படையக்கூடிய வயதுவந்தோருக்கு தனது பாதுகாப்பு அல்லது நலன் குறித்து பயத்தை ஏற்படுத்துவது |
| | எளிதில் பாதிப்படையக்கூடிய வயதுவந்தோரின் நடமாட்டத்தின் சுதந்திரத்தை அல்லது நலத்தை இழக்கும் அல்லது இழக்க அச்சுறுத்தும் நடத்தை |
| **புறக்கணிப்பு** | எளிதில் பாதிப்படையக்கூடிய வயதுவந்தோரின் அத்தியாவசிய கவனிப்பை வழங்குவதற்கான பற்றாக்குறையினால் ஏற்படும் அல்லது ஏற்படக்கூடிய காயம் அல்லது வலி, அல்லது மன அல்லது உடல் ஆரோக்கியத்திற்கு ஏற்படும் தீங்கு. |
| **சுய-புறக்கணிப்பு** | எளிதில் பாதிப்படையக்கூடிய வயதுவந்தோரின் அன்றாட வாழ்க்கையின் அத்தியாவசிய பணிகளைச் செய்யத் தவறியதன் விளைவாக:<br>• மிகவும் சுகாதாரமற்ற அல்லது அபாயகரமான சூழ்நிலைகளில் வாழ்தல்<br>• ஊட்டச்சத்துக் குறைபாடு அல்லது நீரிழப்பால் அவதிப்படுதல்<br>• சிகிச்சையளிக்கப்படாத உடல் அல்லது மனநலப் பிரச்சினையால் அல்லது காயத்தால் அவதிப்படுதல் |

## படி 3
## பாதுகாப்பு உத்தரவுக்கு (பி ஓ) யார் விண்ணப்பிக்கலாம்?

விண்ண ப்பத்திற்கு ஒப்புதல் அளிக்க எளிதில் பாதிப்படையக்கூடிய வயதுவந்தோருக்கு மனநல ஆற்றல் உள்ளதா?

| ஆம் | இல் லை |
|---|---|
| • எளிதில் பாதிப்படையக்கூடிய வயதுவந்தோர் தாங்களே<br>• குடும்ப உறுப்பினர், எளிதில் பாதிப்படையக்கூடிய வயதுவந்தோரின சம்மதத்துடன்<br>• அங்கீகரிக்கப்பட்ட சமூக நல அலுவலர், எளிதில் பாதிப்படையக்கூடிய வயதுவந்தோரின் சம்மதத்துடன்<br>• சமூக நல தலைமை -இயக்குநர் அல்லது பாதுகாவலர் | • அதிகாரம் பெறுநர் அல்லது துணை அதிகாரம் பெறுநர்<br>• குடும்ப உறுப்பினர்<br>• அங்கீகரிக்கப்பட்ட சமூக நல அலுவலர்<br>• சமூக நல தலைமை -இயக்குநர் அல்லது பாதுகாவலர் |

# படி 4

## நான்என்ன ஆவ ணங்க ளை வழங்க வேண்டும்?

| விண்ணப்ப தாரர் | இதன் பொருள் என் ன? | என் ன ஆவணங்கள் தேவைப்ப டுகின்ற ன? |
|---|---|---|
| எளிதில் பாதிப்படையக்கூடிய வயதுவந்தோர் | • 18 வயது அல்லது அதற்கு மேற்பட்டவர்,<br>• மன அல்லது உடல் ரீதியான பலக்குறைபாடு, ஊனம் அல்லது திறன் குறைபாடு ஆகியவற்றைக் கொண் டவர், அதன் காரணமாக,<br>• துன்புறுத்தல், புறக்கணிப்பு அல்லது சுயப்புறக்கணிப்பிலிருந்து தன்னை ப் பாதுகாத்துக் கொள்ள முடியாதவர் | • அடையாள அட்டை<br>• மனதளவில் பாதிக்கப்பட்டால் மனநல ஆற்றல் மதிப்பீட்டு அறிக்கை. உடல் ரீதியான குறைபாட்டிற்கு மருத்துவ அறிக்கையும் நீதிமன்ற த்திற்குத் தேவைப்படலாம்.<br> |
| குடும்ப உறுப்பினர் | • வாழ்க்கைத் துணை<br>• பிள்ளை<br>• தத்தெடுக்கப்பட்ட பிள்ளை<br>• மாற்றான் பிள்ளை<br>• பெற்றோர்<br>• மாமனார், மாமியார்<br>• உடன்பிறந்தோர்<br>• தாத்தா, பாட்டி<br>• பேரப்பிள்ளை<br>• குடும்ப உறுப்பினராக நீதிமன்ற ம் கருதும் மற்ற தனிநபர்(கள்) | • குடும்ப உறுப்பினரின் அடையாள அட்டை<br>• உறவுக்கான ஆதாரம்<br>• எளிதில் பாதிப்படையக்கூடிய வயதுவந்தோரின் கையெ ழுத்திட்ட ஒப்புதல் படிவம்<br>• மனநல ஆற்றல் குன்றிய எளிதில் பாதிப்படையக்கூடிய வயதுவந்தோரின் மருத்துவ நிபுணர் கையெ ழுத்திட்ட மனநல ஆற்றல் மதிப்பீட்டு அறிக்கை<br>• உடல் ரீதியான பலக்குறைபாட்டைக் காட்டும் மருத்துவ அறிக்கை (பொருந்தக்கூடியதாக மற்றும் கிடைக்கக்கூடியதாக இருந்தால்) |
| அதிகாரம் பெறுநர் | எளிதில் பாதிப்படையக்கூடிய வயதுவந்தோரின் நலன், சொத்து மற்றும் விவகாரங்களின் சில அம்சங்களைப் பற்றி முடிவெடுக்க ஒரு நீண்டகால அதிகாரப் பத்திரம் வழங்கும் அதிகாரத்தைக் கொண் ட ஒரு நபர். | • அதிகாரம் பெறுநர் அடையாள அட்டை<br>• நீண்டகால அதிகாரப் பத்திரம்<br>• மருத்துவ நிபுணரின் கையெ ழுத்திட்ட மனநல ஆற்றல் மதிப்பீட்டு அறிக்கை |
| துணை அதிகாரம் பெறுநர் | சில காரியங்கள் தொடர்பாக எளிதில் பாதிப்படையக்கூடிய வயதுவந்தோரின் சார்பில் அவரது நலன், சொத்து மற்றும் அவருடைய விவகாரங்கள் குறித்து முடிவுகளை எடுக்க மனநல ஆற்றல் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட ஒரு நபர். | • துணை அதிகாரம் பெறுநரின் அடையாள அட்டை<br>• நியமனம் குறித்த நீதிமன்ற ஆணை<br>• மருத்துவ நிபுணரின் கையெ ழுத்திட்ட மனநல ஆற்றல் மதிப்பீட்டு அறிக்கை** |

## படி 5

## நான்என் னெண்ண ஆ ணைகளுக்கு விண்ணப்பிக்கலாம்?

| | |
|---|---|
| வன்முறை நடத்தையைக் கட்டுப்படுத்தும் ஆணை | பிரதிவாதி எளிதில் பாதிப்படையக்கூடிய வயதுவந்தோரைத் துன்புறுத்துவதை அல்லது மேலும் துன்புறுத்துவதைத் தடுக்கும் |
| வெளியேற்றும் ஆணை | எளிதில் பாதிப்படையக்கூடிய வயதுவந்தோரின் வசிப்பிடத்திற்கு வெளியே ஒரு பகுதிக்கு அல்லது எளிதில் பாதிப்படையக்கூடிய வயதுவந்தோர் அடிக்கடி சென்று வரும் வேறெந்த இடத்திற்குப் பிரதிவாதி வருவதைத் தடைசெய் யும் |
| அணுக தடைவிதிக்கும் ஆணை | அணுக தடைவிதிக்கும் ஆணை எளிதில் பாதிப்படையக்கூடிய வயதுவந்தோரின் வசிப்பிடத் திற்கு வெளியே ஒரு பகுதிக்கு அல்லது எளிதில் பாதிப்படையக் கூடிய வயதுவந்தோர் அடிக்கடி சென்று வரும் வேறெந்த இடத்திற்குப் பிரதிவாதி வருவதைத் தடைசெய் யும் |
| காணுதலுக்கு தடை விதிக்கும் ஆணை/ தொடர்புகொள்வ தற்கு தடை விதிக்கும் ஆணை | எளிதில் பாதிப்படையக்கூடிய வயதுவந்தோரைப் பிரதிவாதி காண்பதற்கோ அல்லது தொடர்புக்கொள்வதற்கோ தடை செய்யும் |

**துரித ஆணை (இ ஒ)** எளிதில் பாதிப்படையக்கூடிய வயதுவந்தோர் துன்புறுத்தல், புறக்கணிப்பு அல்லது சுய புறக்கணிப்பை அனுபவித்து வருகிறார் அல்லது இவற்றை எதிர்நோக்கும் அபாயம் அதிகம் உண்டு என்பதில் நீதிமன்ற ம் திருப்தி அடைந்தால் விண்ண ப்பத்தின் தொடர்பான விசாரணை நடைபெ றுவதற்கு முன்பாகவே கொடுக்கப்படும் தற்காலிக பாதுகாப்பு ஆணை.

## படி 6

## நான்எங்கே க விண்ணப்பிக்கலாம்?

எஃப்ஜேசியின் 1ஆம் மாடியில் அமைந்துள்ள **குடும்ப பாதுகாப்பு மையத்தில்** நேரடியாக அல்லது வேறெந்த பி.எஸ் .சியில்*:

- அங் மோ கியொவில் அமைந்துள்ள PAVE தனி நபர் மற்றும் குடும்ப பாதுகாப்பு நிபுணர் மையம்;
- பிடோக்கில் அமைந்துள்ள TRANS SAFE நிலையம்; அல்லது
- காமன்வெல் த்தில் அமைந்துள்ள Care Corner Project StART (சிசிபிஎஸ்)

* பி.எஸ் .சி *-களின் ஆக அண்மை ய பட்டியலைக் காண சமூகம் மற்றும் குடும்ப மேம்பாட்டு அமைச்சின் இணையத் தளத்தைப் பார்வையிடவும்.

SG Courts

** தயவு செய்து தகுந்த படிவங்களைப் பெற எஃப்.ஜே.சியின் இணையத்தளத்தைப் பார்வையிடவும்.



அப்படி சுய புறக்கணிப்பிலிருந்து அவதியுற்றுவரும் யாரையாவது நீங்கள் எதிர்க்கொண்டால், உங்களுக்கு அருகில் உள்ள **எஃப்.எஸ்.சியிடம்** உதவி நாடுங்கள், **ComCare தொலைபே சி எண்** 1800 222 0000 அல்லது தேசிய பராமரிப்பு தொலைபே சி எண் 1800 202 6868 தொடர்புக்கொள்ளவும்

## படி 7

# பாதுகாப்பு ஆணைகளுக்குத் (பி ஓ) தாக்கல் செய்வது

### விண்ணப்பம்



- விண்ண ப்பம் செய்யும் அதே நாளில், விண்ண ப்பதாரர் தமது புகாரை நீதிபதியின் முன்னிலையில் உறுதிப்படுத்துவார்.
- அதன் பிறகு, நீதிபதி விண்ண ப்பத்தை ஏற்றுக்கொள்வதைப்பற்றியும், ஒரு துரித ஆணை வழங்குவதைப்பற்றியும் பரிசீலித்து முடிவெடுப்பார்.


### அழைப்பாணை

- துரித ஆணையுடன் (இ ஓ)அல்லது அது இல்லாமல் பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்வு செய்யப்படும்.

### முதல் நீதிமன்ற அமர்வு*

- அப்படி **பிரதிவாதி சம்மதித்தால்**, ஆலோசனை அல்லது நீதிமன்ற ம் கட்டளையிடும் வேறு எந்த திட்டத்திற்கான ஆணையுடன்/ அல்லது ஆணை இல்லாமல், பாதுகாப்பு ஆணை வழங்கப்படும்.
- நீதிபதி நீதிமன்ற மறுஆய்வுக்கு உத்தரவிடுவதைப்பொருத்து, வழக்கு முடிவுபெறும்.
- **பிரதிவாதி சம்மதிக்கவில்லை மற்றும் தரப்பினர்களால் ஓர் ஒப்பந்தத்திற்கு வர முடியவில்லையென்றால்** பாதுகாப்பு ஆணை(பி ஓ) வழங்கப்படாது. வழக்கு விசாரணைக்குத் தொடரும். (தேவைப்பட்டால், அடுத்தடுத்த வழக்கு சம்பந்தமான அறிவிப்புகளுக்கான நீதிமன்ற அமர்வுகள் தொடரலாம்**).

### விசாரணை*



- விசாரணையில் நீதிபதியின் முடிவைப் பொருத்து, எளிதில் பாதிப்படையக்கூடிய வயதுவந்தோருக்கு பாதுகாப்பு ஆணை (பி ஓ) வழங்கப்படலாம் அல்லது வழங்கப்படாமல் போகலாம்.
- அப்படி பாதுகாப்பு ஆணை வழங்கப்பட்டால், தரப்பினர்கள் ஆலோசனைக்குச் செல்லவும் நீதிபதி ஆணையிடலாம்.

*சரியான காரணங்கள் இல்லாமல் பிரதிவாதி நீதிமன்ற த்தில் ஆஜராகவில்லை என்ற ால், நீதிமன்ற ம் அவருக்கு எதிராக கைது உத்தரவு பிறப்பிக்கலாம் அல்லது/மற்றும் பிரதிவாதி இல்லாத நிலையில் வழக்கு நடைபெற உத்தரவிடலாம்.

விண்ண ப்பதாரர் நீதிமன்ற த்தில் ஆஜராகத் தவறினால், அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படும்.

விண்ண ப்பதாரர் விண்னப்பத்தை மீட்டுக்கொள்ள விரும்பினால், அடுத்த அமர்வு/ விசாரணையின் போது நீதிபதி முன் அவ்வாறு செய்யவேண்டும்.

பி ஓ/இ ஓ-வழங்குவதற்கு ஏற்ற காரணங்கள் இல்லையெனில், வழக்கு தள்ளுபடி செய்யப்படும்.

**தரப்பினர்கள் சட்ட ஆலோசனை நாட மற்றும் நியமிக்க அல்லது ஆவணங்கள்/சத்தியப் பிரமாண வாக்குமூலங்களைப் பரிமாறிக்கொள்ள அடுத்தடுத்து அமர்வுகள் நிச்சயிக்கப்படும்.

## அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

**எனக்கு ஒரு வழக்கறிஞர் தேவையா?**
பாதுகாப்பு ஆணை விண்ண ப்பத்திற்கு வழக்கறிஞர் தேவையில்லை. இருப்பினும், 21 வயதுக்கு குறைவான விண்ண ப்பதாரர்கள் ஒரு வழக்கு பிரதிநிதியின் மூலம் வழக்காட வேண்டும். அந்த பிரதிநிதி ஒரு வழக்கறிஞர் மூலம் வழக்காடுவார்.

மற்ற விண்ண ப்பதாரர்கள், தம்மை சட்டபூர்வமாக பிரதிநிதித்துக்கொள்ள விருப்பினால், ஒரு வழக்கறிஞரை நியமிக்கலாம்.

**பிரதிவாதி நீதிமன்ற ஆணைக்கு(கள்) கீழ்ப்படியவில்லையென்றால் என்ன செய்வது?**
உடனடியாக காவல்துறையிடம் புகாரளியுங்கள்.

எளிதில் பாதிப்படையக்கூடிய வயதுவந்தோர் சட்டம் 2018ன் பிரிவு 14(10) கீழ் பாதுகாப்பு ஆணையை மீறுவது ஒரு குற்றச் செயலாகும்.

**எளிதில் பாதிப்படையக்கூடிய வயதுவந்தோர் பிரதிவாதியை நீதிமன்றத்தில் சந்திப்பதற்கு அஞ்சினால் என்ன செய்வது?**
நீதிமன்ற த்திற்கு வரும் போது எளிதில் பாதிப்படையக்கூடிய வயதுவந்தோருடன் ஒரு குடும்ப உறுப்பினரோ அல்லது நண்பரோ துணைக்கு வரலாம். அவ்வாறு யாராலும் வர முடியாவிட்டால், எளிதில் பாதிப்படையக்கூடிய வயதுவந்தோர் குடும்ப பாதுகாப்பு நிலையத்தில் உள்ள குடும்ப நிபுணர்களுடன் காணொளி இணைப்பு வசதிகள் போன்ற மாற்று ஏற்பாடுகள் பற்றி கலந்தாலோசிக்கலாம்.

**மேலும் தகவல் பெற நான் எங்கே அழைக்கலாம்?**
எஃப். எஸ்.சி, பி.எஸ்.சி அல்லது எஃப்.ஜே.சியிலுள்ள குடும்ப பாதுகாப்பு மையத்திலிருந்து நீங்கள் மேலும் தகவல் பெறலாம்.

சமூக நீதி நிலையம், சமூக சட்ட உதவி நிலையம் அல்லது சட்ட உதவி செயலகத்தில் நீங் கள் சட்ட உதவி நாடலாம்.

பாரபட்சமின்றி பணிபுரிய, ஒரு நீதிமன்ற ஊழியர் சட்ட ஆலோசனை வழங்கவோ அல்லது வழக்கறிஞர்களைப் பரிந்துரைக்கவோ முடியாது. சிங்கப்பூர் சட்ட கழகத்திடமிருந்து ஒரு வழக்கறிஞர் பட்டியலைப் பெற்றுக்கொள்ளலாம்.

---

பொறுப்புத் துறப்பு:

- இந்த கையேட்டில் உள்ள விளக்கப்படங்கள் வழக்கமான செயல்முறைகளை மட்டுமே குறிக்கின்றன. எத்தருணத்திலும் ஆகச்சிறந்த வழிமுறையைக் கையாள்வதற்கு வழக்கின் நீதிபதிக்கு முழு விருப்புரிமை அதிகாரம் உண்டு.
- இந்த வெளியீடு பொதுவான தகவல்களுக்கு மட்டுமே தயாரிக்கப்பட்டது. மற்றும் எந்தவொரு வகையிலும் சட்ட ஆலோசனையை அல்லது தனிப்பட்ட வழக்கைப் பற்றிய குறிப்பிட்ட ஆலோசனையைக் கொண்டிருக்கவில்லை.
- குடும்ப நீதிமன்றங்கள் (FJC) இவ்வெளியீட்டினுடைய பொருளடக்கத்துடன் தொடர்பான எந்த மற்றும் அனைத்து கடப்பாடுகளிலிருந்தும் தனது பொறுப்பினை துறக்கின்றது.
- ஐயம் இருந்தால், எப்போதுமே சட்ட ஆலோசனையை நாடவும்.

FAMILY JUSTICE COURTS
SINGAPORE